**EP 06/2023**

14.07.2025

**பெயர் – திலகவதி (ம.சா.1)**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

04.02.2025ம் தேதி குறுக்கு விசாரணை பாரா 1 முதல் 6 வரை பதிவு செய்யப்பட்டது. இன்று பாரா 7 முதல் பதிவு செய்யப்படுகிறது.

(7) என்னிடம் காட்டப்படும் ஆவணம் மாண்பமை உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் சந்தியா நிதி நிறுவனத்திற்காக பங்குதாரர் என்ற முறையில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 325/2022 வழக்கின் தீர்ப்பாணை என்றால் சரிதான். **26.02.2024 தேதியிட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் எ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மாண்பமை உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் சந்தியா நிதி நிறுவனத்திற்காக பங்குதாரர் என்ற முறையில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 389/2022 வழக்கின் முதல் நிலை தீர்ப்பாணை என்றால் சரிதான். **27.06.2024 தேதியிட்ட முதல் நிலை தீர்ப்பாணை சான்றிட்ட நகல் எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் ஆவணம் லிங்கப்பன் என்ற நபரிடம் இருந்து நான் கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரியல்ல என் மகள் சந்தியா என் பெயரில் கிரையம் பெற்றார். **04.12.2017 தேதியிட்ட கிரையம் பத்திரம் எண்.4494/2017 சான்றிட்ட நகல் எ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சந்தியா பைனான்ஸ் பங்குதாரர் என்ற முறையில் தண்டபாணி என்பவருக்கு கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் கடனுக்காக செல் ரசீது ஆவணம் என்றால் சரிதான். **07.06.2017 தேதியிட்ட செல் ரசீது ஆவணம் அசல் எ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தண்டபாணி கடனை திருப்பிச் செலுத்திவிட்டார்.

(8) மாண்பமை உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் ஞானசெல்வம் என்பவருக்கு சந்தியா நிதி நிறுவனம் ரூ. 5 கடனாக கொடுத்தது சம்மந்தமாக அசல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் உடல் நலம் குன்றிய

நிலையில் மருத்துவ சிகிச்சையில் இருந்து வருகிறார் என்றும் நான் நல்ல நிலையில் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/– Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்